# 5. குடியரசு

முந்தைய பாடத்தில் மக்களிடம் நிலவும் ஏற்றதாழ்வுகளை அகற்ற அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களைப் பற்றி அறிந்தோம். இனி, அரசு என்றால் என்ன? என்பது பற்றி அறிவோம்.

முந்தைய காலங்களில் அரசர்கள் – குறுநில மன்னர்கள் ஆட்சி செய்து வந்தார்கள். தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்கள் ஆண்டனர். களப்பிரர், பல்லவர், நாயக்கர், மராட்டியர் என்று பிறரும் வந்து இங்குள்ளவர்களை வென்று தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளை ஆண்டு வந்துள்ளனர்.

## ஐரோப்பியர்கள் வருகை

ஆங்கிலேயர்கள், போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் போன்றோர் வியாபாரம் செய்வதற்காக இந்தியாவிற்கு வந்தார்கள். இங்குள்ள அரசர்களும், சிற்றரசர்களும் தமக்குள் ஓயாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அதைப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர் நம்மை அடிமைப் படுத்திச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கும் மேல் ஆண்டனர். இவர்கள் காலத்தில் ஜமீன்தாரர்களும் உருவானார்கள். பெரும்பாலான நிலங்கள் ஜமீன்தாரர்களின் உடைமைகளாக மாறின.





## இந்தியா – சுதந்திரம் பெறுதல்

ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற வேண்டுமென்ற ஆர்வம் நமது மக்களிடம் மேலோங்கியது. குறிப்பாக 'ஆங்கிலேயர்கள் நம்மை ஆளக்கூடாது; நம்மை நாமே ஆள்வோம்; அதே சமயம் நமக்குள் உள்ள ஏற்றதாழ்வுகளையும் களைவோம்' என்று முடிவு செய்தார்கள். வெள்ளையர்களுக்கு எதிராக அனைவரும் ஒன்று திரண்டுப் போராடினார்கள். அதன் விளைவாக 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது.

விடுதலை பெற்ற இந்தியாவில் எத்தகைய அரசு அமைய வேண்டும் என்ற விவாதம் எழுந்தபோது, நமது நாடு மக்களாட்சி அரசாக அமையவேண்டும் என்ற கருத்து மேலோங்கியது. அதன்படி நாடு விடுதலை அடைந்தபின் மக்களாட்சி அரசு அமைக்கப்பட்டது.

## மக்களாட்சி விளக்கம்

மக்களாட்சி என்பது தற்கால அரசுமுறைகளில் ஒன்றாகும். மக்கள் தங்கள் பிரதிநிதிகள் மூலம் தங்களைத் தாங்களே ஆளும் முறையாகும். இந்தியாவில் பதினெட்டு வயது நிரம்பிய அனைவரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் தங்கள் பிரதிநிதிகள் மூலம் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கி அச் சட்டத்தின்படி ஆளப்பட்டுவருகின்றனர். எனவே இந்தியாவை ஒரு குடியரசு என்கிறோம்.



## நமது அரசு

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறப்பினர்கள் அடங்கிய மக்களவை, சட்டமன்றங்கள் மூலமே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மேலும் சட்டங்கள் இயற்றியும், திட்டங்கள் வகுத்தும் நடைமுறைப்படுத்துகிறோம்.

நமது உறுப்பினர்களை நாம் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கிறோம். குறிப்பிட்ட வயது நிறைந்த யார் வேண்டுமானாலும் சாதி, மதம், இனம், பால், பொருளாதார நிலை என்ற எந்தப் பாகுபாடும் இன்றி தேர்தலில் போட்டியிடலாம்.

நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் அனைவருக்கும் சமமான நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றைக் கண் காணிக்கும் பணி நீதிமன்றத்தினுடையது. உச்சநீதிமன்றம் அரசியல் அமைப்பின் பாதுகாவலனாக விளங்குகின்றது. மக்கள் தங்கள் குறைகளை நீதிமன்றத்தில் முறையிட்டால் நீதிமன்றம் விசாரணை செய்து, சட்டப்படி தீர்ப்பு வழங்கும். சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமம். ஆர்வமும் திறமையும் உள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் சட்டம் பயின்று வழக்கறிஞர்களாகவும், நீதிபதிகளாகவும் வரலாம்.

மாவட்ட ஆட்சியர் அரசிடமிருந்து வரும் ஆணைகளை நடைமுறைப் படுத்துவார்.

குடிநீர், மின்சாரம், உணவுவழங்கல், போக்குவரத்து போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை மாவட்ட ஆட்சியரின் கீழ் உள்ள நிர்வாகத்துறை அலுவலர்கள் நிறைவேற்றுவார்கள் நிர்வாக அலுவலர்கள் கிராமம், வட்டாரம், வட்டம் போன்ற பல நிலைகளில் உள்ளனர்.

அடிப்படைச் சேவைகளில் நாம் குறைகளைச் சந்திக்கும்போது, உரிய அலுவலர்களை அணுகிக் குறைகளைத் தெரிவிக்கலாம். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று, 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' கடைபிடிக்கப்படுகிறது. அன்று அனைத்து அரசு அலுவலகங் களிலும் அந்தந்தப் பகுதிகளில் வாழ்கிற மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கலாம். இது தவிர, மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலர் மாதத்தில் ஒரு நாள் ஒரு குக்கிராமத்திற்கு நேரடியாகச் சென்று முகாமிடுவார். மாவட்டத் தலை நகருக்குச் செல்லும் வாய்ப்பும் வசதியும் இல்லாத அப்பகுதி – சுற்று வட்டார ஏழை மக்கள் இந்த முகாமைப் பயன்படுத்தித் தங்கள் குறைகளை மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாகத் தெரிவிக்கலாம். அவர்கள் குறைகளுக்கு அந்த முகாமிலேயே தீர்வு காண்கிற நாளாக 'மக்கள் தொடர்புத் திட்ட நாள்' அமைகிறது.

நாம் கிரிக்கெட், கால்பந்து போன்ற விளையாட்டுகள் விளையாடுவதற்கு ஆட்ட விதிகளை வகுத்துக் கொண்டுதானே விளையாடுகிறோம் ? அதுபோலவே நமது அரசாங்க அமைப்பிற்கும் விதிகளை அரசியல் சட்டத் தொகுப்பு மூலம் உருவாக்கி வைத்துள்ளோம். இதையே அரசியல் அமைப்புச் சட்டம் என்கிறோம்.

சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதும் குற்றங்கள் நிகழாமல் தடுப்பதும்

காவல்துறையின் பொறுப்பு. நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பது; வேற்று நாட்டவர்களின் படையெடுப்புகளிலிருந்து நாட்டைப் பாதுகாப்பது; மிகப் பெரிய இயற்கைப் பேரழிவுகளின்போது, உள்நாட்டு நிர்வாகத்திற்கு உதவியாகக் களமிறங்கி நிவாரணம் தருவது போன்றவை தேசிய இராணுவத்தின் கடமையாகும்.

நமது இந்திய நடுவண் அரசின் அமைச்சரவையின் தலைவர் பிரதமர் ஆவார். மாநிலங்கள், முதலமைச்சர்கள் தலைமையில் அமைச்சரவைகளால் ஆளப்படுகின்றன. மக்களவை – மாநிலங்களவை – மாநிலச்சட்டமன்றம் ஆகியவை அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நம் நாடு நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது.

**இந்தியா குடியரசான நாள் – 1950 ஜனவரி 26.**

**செயல்பாடு**

1. உங்கள் பகுதியில் நடைபெறும் மக்கள் தொடர்புத் திட்ட முகாம், குறைதீர்க்கும் நாள் முகாம் போன்றவற்றில் ஆசிரியர் உதவியுடன் சிறு குழுவாகச்சென்று பங்கேற்கவும். அங்கு எவ்வாறு குறைகள் தெரிவிக்கப்படுகின்றன? அவற்றுக்கு அந்த இடத்திலேயே முடிந்தவரை எப்படி அலுவலர்கள் தீர்வுகாண்கிறார்கள்? என்று கவனித்து வகுப்பில் விவாதிக்க.

2. உங்கள் ஊரில் / அருகிலுள்ள நகரில் – நீதிமன்றம், காவல் நிலையம் போன்றவற்றிற்குச் சிறு குழுவாக ஆசிரியர் உதவியுடன் சென்று அங்கு எவ்வாறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன? என்பதைக் கவனிக்க. அங்குள்ள அலுவலர்களுடன் உரையாடி, தகவல்களைச் சேகரிக்கவும். பின், வகுப்பறையில் மற்ற மாணவர்களுடன் நீங்கள் கண்ட சிறப்புகளை விவரித்து, விவாதிக்க.

## மதிப்பீடு

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நமது ஆட்சி அமைப்பிற்கு ______________ என்று பெயர்.
2. சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பு ______________ துறையினுடையது.
3. கிராம நிருவாக அலுவலர் முதல் ______________ வரையில் மாதத்தில் ஒருநாள், தொலைதூரக் கிராமம் ஒன்றில் கலந்துகொள்ளும் நிகழ்வுக்கு ______________ என்று பெயர்.

**II. விடையளிக்க.**

1. பண்டைக் காலத்தில் மக்களை ஆண்டவர்கள் யார்?
2. மக்கள் குறை தீர்க்கும் நாள் எப்போது எங்கு நடைபெறும்? அங்குக் குறைகள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன?
3. மக்கள் பிரதிநிதிகள் என்போர் யாவர்? அவர்களை யார் எப்படித் தேர்ந்தெடுக்கின்றனர்?

